எண். 82/2026 நாள்: 16.07.2026

**தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

**எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003**

**செய்தி வெளியீடு**

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வில் (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை) அடங்கிய பதவிகளுக்கு (அறிவிக்கை எண். 10/2025, நாள் 13.06.2025 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) நடைபெற்ற தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் 27.02.2026 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வில் (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை) அடங்கிய கீழ்கண்ட பதவிகளுக்கான நான்காம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை, (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை – 600 003 – ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் 23.07.2026 அன்று நடைபெற உள்ளது.

| | |
|---|---|
| **மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு**<br>**நாள்:** 23.07.2026 | இளநிலை பயிற்சி அலுவலர் (பொறியியல் வரைபடம்) (பதவிக் குறியீடு – 3621), இளநிலை பயிற்சி அலுவலர் (பணிமனை கணக்கீடு அறிவியல்) (பதவிக் குறியீடு – 3631), இளநிலை தொழில்நுட்ப உதவியாளர் (பதவிக் குறியீடு – 1853), இளநிலை பயிற்சி அலுவலர் (நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம்) (பதவிக் குறியீடு – 3624), இளநிலை பயிற்சி அலுவலர் (பொருத்துநர்) (பதவிக் குறியீடு – 3625), இளநிலை பயிற்சி அலுவலர் (தையல் வேலை தொழில் நுட்பம்) (பதவிக் குறியீடு – 3640), இளநிலை பயிற்சி அலுவலர் (துணிநூல் இயந்திர மின்னணுவியல்) பதவிக் குறியீடு – 3645), விடுதிக் கண்காணிப்பாளர் மற்றும் உடற்பயிற்சி அலுவலர் (பதவிக் குறியீடு – 1731), இளநிலை பயிற்சி அலுவலர் (உணவு தயாரிப்பு) (பதவிக் குறியீடு – 3626), பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர், கடலூர் (பதவிக்குறியீடு – 3557), பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர், நாகப்பட்டினம் (பதவிக்குறியீடு – 3568), இளநிலை வரைதொழில் |

| | |
|---|---|
| | அலுவலர், நெடுஞ்சாலை (பதவிக்குறியீடு – 3115), இளநிலை வரைதொழில் அலுவலர், தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் லிமிடெட் (பதவிக்குறியீடு – 3547), இளநிலை வரைதொழில் அலுவலர், தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதி கழகம் (பதவிக்குறியீடு – 3759), இளநிலை பயிற்சி அலுவலர், (நில அளவையாளர்) (பதவிக்குறியீடு – 3643), இளநிலை பயிற்சி அலுவலர் (கட்டடக்கலை வரைவாளர்) (பதவிக்குறியீடு – 3615). |

தேர்வர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண் / இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் தற்காலிக தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

நான்காம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக் குறிப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in – லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். நான்காம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E–mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நான்காம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்கள் எழுத்துதேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப மேற்படி பதவிகளுக்கான தெரிவு மேற்கொள்ளப்படும். எனவே, நான்காம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வர்கள் மேற்படி நான்காம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திரு.பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்